உடுநுவர பிரதேச சபை
கண்டி மாவட்டம்

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 ஜுலை 23 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 ஒக்தோபர் 18 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஒக்தோபர் 21 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

1.2 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின்பாதகமானஅபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணத்தால்நிதிக் கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் உடுநுவர பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3** பாதகமானஅபிப்பிராயத்திற்கான அடிப்படை

**1.3.1** கணக்கீடு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 3/81 வருமான தலைப்புக்கு, குறித்த ஆண்டின் வருமானம் ரூபா 425,240 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது, குழாய் கிணறுகள் பெறுமதி ரூபா 1,741,000 யினால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்கிறேன். |
| (இ) | நிலையான சொத்துக்கள் கணக்கு மற்றம் அட்டவணை சமப் படுத்துவதற்காக ரூபா 250,000 பெறுமதியான தொகையொன்று காணி மற்றும் கட்டிடங்கள் கணக்கிலிருந்து தொங்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்கிறேன். |
| (ஈ) | மீளாய்வாண்டின் பொது, கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,521,343 பெறுமதியான நிலையான சொத்தக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | வித வரி மென் பொருளின் மற்றும் கணக்கின் ஆரம்ப மீதி இணங்காமையை சரி செய்யும் போது ரூபா 818,827 கூடுதலாக சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்கிறேன். |
| (ஊ) | சரியாக உறுதிப்படித்திக் கொள்ளாது மற்றும் ஒழுங்கான அங்கீகாரமின்றி ஆரம்ப மீதிகளை சரி செய்யவதற்கு ரூபா45,998,433 பெறுமதியொன்று திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்ததற்குரிய அங்கீகாரத்தை பெற்றக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| (எ) | மீளாய்வாண்டு இறுதி திகதிக்கு வேலை கடன் கொடுத்தோர் மற்றும் செலவினம்(செலவின இலக்கம் 304)ரூபா 431,312 இனால் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்கிறேன். |
| (ஏ) | சபை நிதிய வேலைகள் மற்றும் வெளி ஒதுக்கீடு வேலைகளுக்காக ஆண்டினுள் செலவிட்ட தொகையை இரு முறை செலவு வைத்த காரணத்தால், மொத்த செலவினம் ரூபா 5,195,624 இனால் கூடுதலாக குறிப்பிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்கிறேன். |
| (ஐ) | வேலை கடன் கொடுத்தோர் கொடுப்பனவு ரூபா 1,209,554 இனால் கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்கிறேன். |
| (ஒ) | 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் கிடைத்திருந்த 2014 ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டணம் ரூபா 7,417,360 இனை மேலும் பெற வேண்டிய முத்திரைக் கட்டணமாக கடன் பட்டோரின் கீழ் குறிப்பிட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டின் சரி செய்கிறேன். |

**1.3.2** இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்கள் பிரகாரம்,03 கணக்கு விடயங்களின் மீதியை துணை பதிவேடுகளுடன்இணக்கம் செய்யும் போதுரூபா 16,180,842 இணங்காமை நிலவியது. | குறித்த மீதிகளில் வித்தியாசத்தை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்கிறேன். |

**1.3.3** தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 திகதிக்கு நிலவிய ரூபா 8,995,776 ஆன தொங்கல் செலவு மீதியை தீர்த்தருக்கவில்லை. | தொங்கல் கணக்கின் மீதியை துரிதமாக தீர்த்திக்கொள்ள வேண்டும். | 2019 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்கிறேன். |

**1.3.4** பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ)** பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த பெற வேண்டிய கணக்கு மீதிகளில் கூட்டுத் தொகை ரூபா 9,693,432 உம் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகற்கும் இடையிலான காலத்தை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளில் கூட்டுத் தொகை ரூபா 59,802,918 ஆக இருந்தது. | அறவடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெற வேண்டிய தொகையிலிருந்து பங்கொன்று அறவிடப்பட்டிருந்ததுடன்,எஞ்சிய தொகை 2019 ஆண்டின் போது அறவிடவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகற்கும் இடையிலான காலத்தை விஞ்சியிருந்தசெலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 4,265,588 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். | 2019 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்கிறேன். |

**1.3.5** கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை

தகவல்கள் சமர்ப்பிக்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு, கோவைகள், அட்டவணை, பற்றுச்சீட்டு, இருப்பு பதிவேடு மற்றும் கடன் கொடுத்தோர் பதிவேடு பேன்றவை சமர்ப்பிக்காததன் காரணத்தால், கூட்டுத் தொகை ரூபா 189,699,834 ஆன 16 கணக்கு விடயங்களைகணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். | பதிவேடுகள் நாளாதவரையாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், 2019 ஆண்டின் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 22 கணக்கு விடயங்களின் ஆரம்ப மீதிகளில் நிலவிய ரூபா 123,659,729 ஆன இணங்காமையை தீர்த்துக்கொள்ளாததன் காரணத்தால், நிதிக் கூற்றுக்களில் 2018 சனவரி 01 திகதிக்கு உள்ள மீதிகளில் உண்மை தன்மையை கணக்காய்வின் போது உறுதிபடித்திக்கொள்ள முடியாமலிருந்தது. | ஆரம்ப மீதிகளை சரியாக சீராக்கம் செய்து தீர்க்க வேண்டும். | 2019 ஆண்டின் போது சரி செய்கிறேன். |

1.4 இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும்முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவு. | சபைக்கு சொந்தமான அனைத்து பாதைகளின் விபரங்களையும் குறிக்கப்பட்டு பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | பாதைகள் பதிவேடு சரியாக பேணப்பட வேண்டும். | நாளாதுவரையாக்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி கோவை | | | |
| (i) | 59 மற்றும் 67 விதிகள் | சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள கைத்தொழில்கள், வியாபாரங்கள் மற்றும் தொழில்கள், டிஜிடல் கோபுரம் மற்றும் சுற்றுலா அதிகார சபையின் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்கள் தொடர்பாக கணிப்பாய்வொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | நிதி மற்றும் நிர்வாக விதிகள் பிரகாரம் செயற்பட வேண்டும். | கணிப்பாய்வு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 218 ஆம் விதி | காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக ஆய்வொன்று செய்திருக்கவில்லாததுடன், நிலையான சொத்துக்கள் பதிவேடும் உரி முறையில் நாளாதுவரையாக்கப்பட்டு இருக்கவில்லை. | குறித்த விதிகள் பிரகாரம் ஆய்வு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | கணிப்பாய்வு மற்றும் நாளாதுவரையாக்கள் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாது 223 வைப்புக்கள் 29 வருடங்களாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபை அங்கீகாரத்தின் மீது மகா சபை நிதியத்திற்கு செலவு வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 1952 இன் 06 இலக்க அங்கீகரிக்கப்பட்ட துணை சட்ட ii ஆம் பிரிவு ஏற்பாடுகள். | விளம்பரப் பலகைகள் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்படவில்லை. | ஆய்வொன்று மேற்கொள்ளப் பட்டுவிளம்பரப் பலகைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | தற்போது அறவிடப்படுகிறது. |
| (உ) | ஏனைய சுற்றறிக்கைகள் | | | |
| (i) | 2002 நவம்பர் 28 இலக்கம் IAI/2002/02 கொண்ட திறைசேரி சுற்றறிக்கை | கணனி மற்றும் கணனி உதிரிப்பாகங்களை குறிப்பிட பதிவேடொன்று பராமரிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | 2016 மார்ச் 17 திகதிய இலக்கம் 2016/3 கொண்ட உள்ளூராட்சி ஆணையாலரின் சுற்றறிக்கையில் 04 ஆம் பிரிவு | 04 கடையறைளில் மதிப்பீட்டு அடிப்படையின்றி வாடகை அறவிடப்படுகிறது. | மதிப்பீடு அடிப்படையின் கீழ் வாடகை அறவிட வேண்டும். | ஆதனங்களில் பிரச்சினை நிலவுவதால், எதிர்காலத்தில் தீர்திதுக்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானசபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 1,372,964 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 41,190,418 ஆனது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாகமுன்வைக்கப்பட்டமதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 8,880,000 | 11,556,050 | 6,178,196 | 22,363,307 | 6,770,000 | 12,484,060 | 6,276,425 | 17,044,620 |
| (ii) | வாடகை | 1,672,680 | 931,070 | 829,920 | 291,031 | 1,473,000 | 1,280,180 | 1,205,740 | 800,262 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,501,000 | 1,314,062 | 1,314,062 | -- | 1,301,000 | 1,411,600 | 1,411,600 | -- |
| (iv) | ஏனைய வருமானம | 33,424,662 | 37,161,240 | 7,699,180 | 69,340,774 | 29,000,000 | 32,857,590 | 38,963,237 | 15,584,440 |
| | கூட்டுத் தொகை | 45,478,342 | 50,962,422 | 16,021,358 | 91,995,112 | 38,544,000 | 48,033,430 | 47,857,002 | 33,429,322 |

## 2.2.2 வீத வரி மற்றும் குத்தகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ)** வீத வரி | | |
| மீளாய்வாண்டு இறுதி திகதிக்கு ரூபா 21,089,061 ஆன வித வரி மீதியொன்று அறவிடப்பட வேண்டியதாக நிலவியது. | அறவிட வேண்டிய வீத வரி அறவிடப்பட வேண்டும். | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| **(ஆ)** ஏக்கர் வரி | | |
| மீளாய்வாண்டு இறுதி திகதிக்கு அறவிட வேண்டிய ரூபா 245,796 ஆன மீதியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2.2.3 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 2,485,752 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 66,844,522 ஆனது. | பெற வேண்டிய கட்டணத்தை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் செய்ய வேண்டும். | எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும்,மக்கள் நலன், இலகுமற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ)** வேலைகள் மேறகொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் பாதீட்டினூடாக கழிவு பொருள் கருத்திட்டத்திற்காக குப்பை கொட்டிலின் வடிகட்டித் தொகுதியை செய்வதற்கு ரூபா 300,000 ஆன உதுக்கீடு ஏற்படுத்தப்பட்டிருந்த போதும், அவ் வேலையை செய்து இருக்கவில்லை. | சரியான சாத்தியப்பாட்டு ஆய்பொன்றினூடாக செயற்பாட்டிற்கு ஒதுக்கீடு ஏற்பாடு செய்ய வேண்டும். | பொது மக்கள் எதிர்பின் காரணமாக, எதிர்பார்த்த செயற்பாடுகளை மேற்கொள்ள முடியவில்லை. |

**(ஆ)** சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆண்டிற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாது கிரிவவுல குப்பை கொட்டிலிற்கு கழிவுகள் வெளியிடப்பட்டுக் கொண்டிருந்தன. | கழிவுப் பொருட்களை வெளியிடல் முறையாக மேற் கொள்ளப்பட வேண்டும். | இது தொடர்பில் பிரதேச செயலாளருடன் தொடர்புபட்டு தேவையான முன் ஏற்பாடுகளை மேற் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆகஸ்ட் 14 திகதிய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சின் இலக்கம் NP/SP/SDG/17 கொண்ட சுற்றறிகை பிரகாரம், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் திட்டங்கள் முறையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிகை பிரகாரம், திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.2** முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2011 முதல் 2015 வரையான காலத்தினுள் வீத வரி சேகரிக்கையில், ஏற்பட்டுள்ள நிதி மோசடிகள் தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட ஆரம்ப மற்றும் இறுதி பரிசோதனையின் போது, இனங்காணப்பட்ட ரூபா 1,028,451 ஆன மீதியை உரிய தரப்பினரடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம், உரிய பரிசோதனை மேற் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை மீதியை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 119 பிரிவு பிரகாரம் நடவடிக்கை மேற் கொள்ளாது, சபையினால் தவுலகல புத்தகசாலைக்கு அருகிலுள்ள வாராந்த சந்தையை 2014 இன் பின்னர் மூடப்பட்டிருந்தது. | சட்டத்தின் பிரகாரம், பொது நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். | கணக்காய்வு அவதானங்களுடன் இணங்குகிறேன். |

3.3 மனித வள முகாமைத்துவம்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஆளணி பற்றாக்குறையும் மிகையும் | | |
| 2018 திசெம்பர் 31 திகதிக்கு சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கையினுள் 14 வெற்றிடங்கள் நிலவின் | வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள வேண்டும். | ஊழியர் ஒரு பகுதியினர் ஆட்சேர்க்கப்பட்டதுடன், எதிர்காலத்தில் ஏனைய ஆளணியை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) ஊழியர் கடன் | | |
| 2011 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை இடம் மாறிச் சென்ற 11 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 154,184 ஆன ஊழியர் கடன் மீதியை அறவிட்டிருக்கவில்லை. | நிலுவை ஊழியர் கடன் அறவிடப்பட வேண்டும். | கடிதம் மூலம் அறிவித்துள்ளதுடன், அறவீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

3.4.1 சொத்துக்கள் பதிவிடப்படாமை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமாக ரூபா 112,461,100 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் இருந்த போதும், நிலையான வைப்பு பதிவேடு நாலாவதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களின் பெறுமதியை சரியாக இனங்கண்டு பதிவிட வேண்டும். | ஆய்வொன்றை மேற் கொள்வதுடன், எதிர்காலத்தில் பதிவிடுகிறேன். |

3.4.2 விளைவற்ற/ குறைபயன்பாட்டுச் சொத்தக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுமதிரூபா 374,501 ஆன நீர் குழாய் உதிரிப்பாக 2235 உருப்படிகள் 10 ஆண்டுகளிற்கும் அதிக காலமாக பயன்படுத்தப்படாது நீர் களஞ்சியத்தில் நிலவியது. | சொத்துக்கள் விளைவற்றதாக ஆகுவதற்கு இடமளிக்கக் கூடாது. | தேவையான சந்தர்பங்களில் பழுதுபார்த்தல் வேலைகளிற்காக நீர் குழாய் உதிரிப்பாகங்களை பயன் படுத்த களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | ரூபா 5,121,000 பெறுமதியான 10 சொத்து உருப்படிகள் 01 முதல் 06 ஆண்டுகாலமாக விளைவற்று மற்றும் குறைபயன்பாட்டுடன் நிலவின. | குறித்த செயற்பாடுக துரிதமாக மேற்கொள்ளல் இடம் பெறவேண்டும். | ஏல விற்பனை செய்ய வேண்டிய சொத்துக்களை எதிர்காலத்தில் ஏலத்தில் விற்கிறேன். |
| (இ) | கார் வண்டியொன்று துருப்பிடிக்கும் வகையில் சபை வளவில் நிருத்தப்பட்டிருந்தது. | சொத்துக்களிலிருந்து உரிய பயன்பாட்டை பெற்றுக் கொள்ள வேண்டும். | இதனை பிரதான செயலாளர் அலுவலகத்திற்கு வழங்க நடவடிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. |

3.4.3 வருடாந்த பொருட் / இருப்பு கணிப்பீடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதி 200 பிரகாரம், சபையின் கொஸ்ஹின்ன சுடலையிலுள்ள 25 உபகரண உருப்படிகள் மற்றும் கிரிவவுல கொம்போஸ்ட் கொட்டிலிலுள்ள 18 உபகரண உருப்படிகள் பொருட் பதிவேட்டிற்கு உட்படுத்தப்படவில்லை. | குறித்த விதி பிரகாரம், சரியாக பொருட் பதிவேட்டை நாலாவது வரையாக்கப்பட வேண்டும். | 2019 ஆண்டின் போது பொருட் பதிவேட்டை நாலாவது வரையாக்குகிறேன். |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (ஆ) | 2014,2015 மற்றும் 2016 ஆண்டுகளில் ஆய்வின் மூலம் பராதீனம் செய்ய பரிந்துரைக்கப்பட்ட பண்டங்கள் பராதீனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | பராதீனம் செய்ய பரிந்துரைக்கப்பட்ட பண்டங்களை அகற்ற வேண்டும். | பராதீனம் செய்யவத்றகான குழுவொன்னை நியமித்து, எதிர்காலத்தில், இப் பண்டங்களை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | 2018 ஆண்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட வாசிகசாலை புத்தக ஆய்வின் பிரகாரம், ஆய்விற்கு சமர்பிக்கப்படாத ரூபா 43,065 பெறுமதியான 201 புத்தகங்களிற்காக தேவையான முன் ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. | பற்றாக்குறையான புத்தகங்கள் தொடர்பில் உரிய விதத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறிக்கை ஒன்றை சமர்பிக்குமாறு ஐந்து நூலக பொருப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் முன் நடவடிக்கை மேற்கொண்டு அறவீட்டு நடவடிக்கைகளை மேற் கொள்கிறேன். |

3.4.4 வாகன பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1995, 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் கிடைத்திருந்த ரூபா 36,615,296 பெறமதியான 05 வாகனங்களின் உரிமையை சபைக்கு சுவிகரித்திக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிமையை சுவிகரித்திக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில், உரிமையை சபைக்கு சுவிகரித்திக்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

3.5 பெறுகைகள்

3.5.1 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மூலதன செலவினத்திற்காக ரூபா 11,869,092 செலவிடப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்க வேண்டும் | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

3.5.2 வழங்கள் மற்றும் சேவைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அரங்கிற்கு தேவையான கதிரைகள் மற்றும் மேசைகளை | சரியான அளவுத் திட்டத்தின் பிரகாரம் | அந் நிறுவனத்துடன் இதனை சரி செய்து |

| | | |
|---|---|---|
| கொள்வனவு செய்வதற்கான அளவுத்திட்டம் பிரகாரம், மி.மீ 2400x750x750 அளவு மேசைகள் கொள்வனவு செய்யப்பட வேண்டிய போதும், 06 மேசைகள் மி.மீ 2005x605x760 மற்றும் 02 மேசைகள் மி.மீ 1305x605x760 என அளவுத் திட்டத்திற்கு மாற்றமாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 353,600 செலுத்தப்பட்டிருந்தது. | கொள்வனவு செய்யப்பட வேண்டும். | கொள்ள கலந்துரையாடப்பட்டுள்ளது. |

**4.** கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**4.1** நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 (நிதி மற்றும் நிருவாக) விதி 168 (1) பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் அடுத்த ஆண்டில் மார்ச் 31 தகதிக்கு முன் கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்கள் 2019 ஜூலை 23 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | உரிய விதிகள்/ சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் 02 மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை பிரகாரம் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | 2018.05.10மற்றும் 2018.08.10 போன்ற திகதிகளில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நடாத்தப்பட்டிருந்தன. |